**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 -ம் நாள் வியாழக்கிழமை

**O.S. No.21/2025**

பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW.1ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சங்கர் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | சாமிநாதன் | கிராமம் | : | கோனேரிராஜபுரம் |
| | | | தொழில் | : | நடத்துநர் (ஓய்வு) |
| | | | வயது | : | 67 |

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி..**

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா. 1 ஆவணத்தின் அசல் எங்கு உள்ளது என்றால் எனது வழக்கறிஞரிடம் உள்ளது. ஓர் ஆவணத்தின் அசல் இருக்கும்பொழுது சான்று நகலை தாக்கல் செய்வது சட்டத்திற்கு புறம்பானது என்றால் சரியல்ல. எனக்கும் எனது மனைவிக்கும் வாக்காளர் அட்டை எந்த ஊரில் உள்ளது என்றால் கோனேரிராஜபுரம் ஊரில் உள்ளது . வழக்கு சொத்து வடமட்டத்தில் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா 1 ஆவணத்தில் சொத்து விவரத்தில் புல எண் 204/18 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பிறகு உட்பிரிவு செய்யப்பட்டு புல எண் 204/26 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து அதன் பிறகு புல எண் 204/26 ஆக புதிதாக வகைபாடு செய்யபட்டுள்ளது என்றால் சரிதான். நான் என் செய்த உட்பிரிவு தவறுதலாக செய்யப்பட்டடுள்ளது என்று வருவாய் கோட்டாட்சியரிடம் வாதிகள் மனு செய்து அதன்படி என்னை விசாரணை செய்தார்களா என்றால் இல்லை. வாதிகள் மனு செய்ததன் பேரில் எனது மனைவி ராஜகுமாரியின் பெயரில் உள்ள வருவாய் பதிவேடுகளை நீக்கம் செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் பெயரில் வழக்கு சொத்து எவ்வாறு கிடைக்கபட்டுள்ளது என்றால் 1ம் பிரதிவாதிக்கு பட்டா படி சொத்து கிடைக்கப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதியின் பூர்வீகம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்து உள்ள ஊருக்கு நான் சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன். வழக்கு சொத்து பரவாக்கரை ரோட்டடிற்கு கிழக்குப் புறம் உள்ள சொத்து என்றால் சரிதான். விஸ்வலிங்கம் என்பவர் அவருக்கு சொந்தமான இடத்தில் காம்பவுன்ட் சுவர் எழுப்பியுள்ளார்

என்றால் சரிதான். விஸ்வலிங்கம், காம்பவுன்ட் சுவர் கட்டியுள்ள இடத்திற்கு கிழக்கே எனது மனைவியின் இடம் உள்ளதா என்றால் இல்லை. நான் விஸ்வலிங்கம் கட்டிய காம்பவுன்ட் சுவர் கட்டக்கூடாது என்று காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் அவ்வாறு நான் எதுவும் கொடுக்கவில்லை. பரவாக்கரை ரோட்டை ஒட்டி வாதிகளுக்கு ஓட்டு வீடும் மாடி வீடும் இருக்கிறதா என்றால் இருக்கிறது. வீட்டுக்கு நடுவில் மனை கட்டுகளும் உள்ளது என்றால் சரிதான். பாலையூர் காவல் நிலைய அதிகாரியை விசாரிப்பதில் எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. எனது பிரமான வாக்குமூலத்தில் நான் புல எண் 204/26 ல் தான் இருப்பதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது பிரமாண பத்திரத்தில் கிரயம் பெறப்பட்ட சொத்து தான் புல எண் 204/18 லிருந்து புல எண் 204/26 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாணப் பத்திரத்தில் கோனேரிராஜபுரத்திலும் வடமட்டத்திலும் தனித்தனியா வீடு உள்ளது என்று ஏன் குறிப்பிடவில்லை என்றால் தாவா சொத்தினை பொறுத்து மட்டும் குறிப்பிட்டுள்ளேன். வடமட்டத்தில் எனக்கு வீடு இல்லை என்பதால்தான் பிரமாணபத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வாசா 5 ஆவணத்தை பற்றி எனக்கு தெரியாது. நான் வாதிகள் குடியிருக்கும் புல எண் 204/18 ஐ கிரயம் பெற்றுவிட்டு தற்சமயம் 204/26 ஐ கிரயம் பெற்றதாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது வீட்டிற்கு பரவாக்கரை ரோடு வழியாக தான் செல்லவேண்டும் என்றால் சரிதான். கோனேரிராஜபுரத்தில் குடியிருக்கும் வீட்டின் மின் கட்டண ரசீதையும் வீட்டு ரசீதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மனைவி இந்நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார் என்றால் சரிதான். எனது மனைவி நீதிமன்றத்திற்கு வந்தபோதும் அவர் சாட்சி சொல்லாமல் உண்மையை மறைத்து நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் எனது மனைவியின் பெயரில் உள்ளது. எனது மனைவியின் பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்றால் இல்லை. வாதிகள் மோசடியாக தங்கள் பெயரிலும் எனது மனைவி பெயரிலும் கூட்டு பட்டா வாங்கியுள்ளார்கள். நான் தாவா சொத்தினை மீனாட்சி என்பரிடம் கிரயம் பெற்று தனி பட்டாவாக உள்ளது. வாசா.ஆ. 3 ஆவணத்தின் படி எனது மனைவியின் பெயரில் இருந்த தனி பட்டாவில் கூடுதலாக வாதியின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. புல எண் 204 ல் எத்தனை வருடங்களாக குளம் இருந்து வருகிறது என்றால் எனக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து இருந்து வருகிறது. எனது வழக்கு சொத்திற்கு கிழக்கே நிர்மலா என்பவரின் மனை உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு வேறு சொத்துகள் உள்ளதா என்றால் அந்த சொத்தை தான் தற்போது வாதிகள் அபகரித்து அனுபவித்து வருகிறார்கள். எத்தனை வருடங்களாக வாதிகள் அவர்களுக்கு சொந்தமான சொத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சுமார் 10 ஆண்டுகளாக இருந்து வருகிறார்கள். வாதிகள் மீனாட்சியிடம் அபகரித்து வீடு எதுவும் கட்டவில்லை என்றால் சரியல்ல. மீனாட்சிக்கு மேற்கு புறத்தில் சொத்துகள் எதுவும் இல்லை என்றால் சரில்ல. 2ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் உறவினர்கள் என்றல் சரிதான். நான் தாக்கல் செய்த முன்னெச்செரிக்கை மனுவில் நான்கெல்லை பி.வா.சா.ஆ. 1 ஆவணத்திற்கு மாறாக உள்ளது என்றால் சரியல்ல. நான் சொத்து எங்கு உள்ளது என்று தெரியாமல் தவறாக வழக்கு செய்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.05 13:57:24 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.